செ.வெ.எண்-15 நாள்-10.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் பொதுவிநியோகத் திட்டம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சம்பந்தமான **பொது மக்கள் குறைதீர் கூட்டம், 12.10.2019** அன்று சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 01.00 மணி முதல் கீழ்க்கண்ட கிராமங்களில் நடைபெற உள்ளது.

அரியலூர் வட்டத்தில் **அன்னிமங்கலம்** கிராமத்திலும், உடையார்பாளையம் வட்டத்தில் **பிலிச்சுக்குழி (ஒக்கநத்தம்)** கிராமத்திலும், செந்துறை வட்டத்தில் **சன்னாசிநல்லூர்** கிராமத்திலும் மற்றும் ஆண்டிமடம் வட்டத்தில் **சிலம்பூர் (வடபாகம்)** கிராமத்திலும் நடைபெறவுள்ளது.

**அரியலூர் வட்டத்திற்கு** மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரும், **உடையார்பாளையம் வட்டத்திற்கு** பொது விநியோகத்திட்ட துணைப்பதிவாளரும், **செந்துறை வட்டத்திற்கு** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளரும், **ஆண்டிமடம் வட்டத்திற்கு** மாவடட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரும் மேற்பார்வையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட கூட்டத்தினை வட்ட வழங்கல் அலுவலர்கள் முன்னின்று நடத்துவார்கள். அக்கூட்டத்தில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். எனவே பொதுமக்கள் உணவுப்பொருள் வழங்கல் சம்பந்தமான குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**